முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி
(கொடைக்கானல் முகாம்)
O.S. No. 247/2018

தேதி : 03.01.2025
(வா.சா.2) – திரு.சுரேஷ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :

1. வாதி எனக்கு நெருங்கிய நண்பர் என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆறுமுக செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு எப்படி தெரியும் என்றால் வாதி சொல்லி தெரியும். நான் நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், வாதி சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் உள்ள வீட்டிற்கு எத்தனை மின் இணைப்பு உள்ளது என்றால் அது தெரியாது. பிரதிவாதி எங்கு குடியிருந்தார்கள், வேலை பார்க்கிறார்கள் என்ற விபரம் தெரியாது என்றால் ஆமாம்.

2. நான் வழக்கு சொத்திற்கு சென்றுள்ளேனா என்றால் இல்லை. வாதியின் வீடு சித்தூரில் உள்ளது. அங்கு அவரது பெரியம்மா ஜெயக்கொடி அங்கு வருவார் அந்த வகையில் எனக்கு தெரியும். மேற்படி ஜெயக்கொடி எவ்வளவு நாள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார்கள் என்றால் அது தெரியாது, ஆனால் வாதிதான் அவரை பார்த்து கொண்டார். கிரைய பத்திரத்தில் நான் தான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் ஆமாம். கிரைய தொகை எப்போது கொடுத்தார்கள் என்றால் முன்பு கொடுத்தார்களா என்று தெரியாது, ஆனால் ரூ.1,85,000/– கிரையம் எழுதும்போது கொடுத்தார்கள், நான் பார்த்தேன்.

3. தொகை ரொக்கமாக கொடுத்தார்களா அல்லது D.D ஆக கொடுத்தார்களா என்றால் ரொக்கமாகதான் கொடுத்தார்கள். நான் சொல்வதுபோல கிரையத் தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றும், ஜெயக்கொடிக்கு உடல்நிலை சரியில்லாததை வைத்துக்கொண்டு எந்தவொரு தொகையும் கொடுக்காமல் கிரைய பத்திரம் எழுதப்பட்டது என்றும், வாதி என் நண்பர் என்பதால் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. தற்போது என்னுடைய சாட்சியத்திற்கும் நிரூபணவாக்குமூலத்திற்கும் முரண்பாடாக உள்ளது என்றும், எனவே வாதி வழக்கறிஞர் தயார் செய்த நிரூபணவாக்குமூலத்தை படித்து பார்க்காமல் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு விபரங்கள் தெரியாது என்றும், வாதி என் நண்பர் என்பதால் அவர் சொன்னதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K RENUGADEVI

Digitally signed by K RENUGADEVI
Date: 2025.01.03 18:01:16 +0530

முதன்மை சார்பு நீதிபதி,

பழனி.